பிப்ரவரி 2, 2023

# நகரின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கான பின்னூட்டக்கருத்துக்கள், யோசனைகளை வழங்க ப்ராம்ப்ட்டன் நகர குடியிருப்புவாசிகளும் வணிகர்களும் வரவேற்கப்படுகிறார்கள்

ப்ராம்ப்ட்டன், ON – நகரின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கு வடிவம் கொடுப்பதில் உதவுவதற்காக, நகர நிர்வாகம் தனது குடியிருப்புவாசிகள், சமுதாய குழுக்கள் மற்றும் வணிக உரிமையாளர்களிடம், இவற்றுக்கான உள்ளீடுகள், பின்னூட்டக்கருத்துக்கள் மற்றும் யோசனைகளை நாடுகிறது.

நகர நிர்வாகமானது டெலிபோன் டவுன்ஹால்கள், அந்தந்த வார்டுகளில் காப்பி குடித்தபடியேயான அரட்டைகள் மற்றும் வணிக வட்டமேஜை கலந்துரையாடல்களில் கலந்து கொள்ள பொதுமக்கள் அழைக்கப்படுகிறார்கள்; இவை வரவு செலவுத் திட்டம் அமைக்கும் செயல்முறைக்காலம் முழுவதுமாக நடைபெறும்.

**இப்போதே பதிவு செய்யுங்கள்: வரவு செலவுத் திட்டத்திற்கான டெலிபோன் டவுன்ஹால் #1 – பிப்ரவரி 7**

வரவு செலவுத் திட்ட தலைவரும் மேயரும் ஆகிய பேட்ரிக் ப்ரவுன், மற்றும் திட்டத் துணைத்தலைவரும் கவுன்சிலருமாகிய பால் விசெண்ட் ஆகியோர் 2023 வரவு செலவுத் திட்டத்திற்கான முதலாவதுடெலிபோன் டவுன் ஹாலுக்கு உபசரிப்பு வழங்குவார்கள்; இது பிப்ரவரி 7, 2023 வெள்ளிக்கிழமை மாலை 7 முதல் 8:30 வரை நடைபெறும்.

இதில் பதிவு செய்து ஒரு தொலைபேசி அழைப்பினைப் பெற்று கவனித்துக் கேட்க தயவு செய்து இங்கே க்ளிக் செய்யவும். குடியிருப்புவாசிகள் ஆன்லைனில் இங்கேயும் கூட கவனித்துக் கேட்கலாம்

சமுதாயத்தின் முன்னுரிமை கொண்ட விஷயங்கள் பற்றி பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு பெறுவார்கள்; நகரப் பணியாளர்களிடம் கேள்விகள் கேட்கலாம் மற்றும் 2023 வரவு செலவு திட்டத்திற்காக பணியாற்றுகின்ற மேயர் மற்றும் கவுன்சிலர்களுக்கு யோசனைகளை வழங்கலாம்.

**உங்களுக்கென இந்த தேதிகளை ஒதுக்கவும்**

2023 வரவு செலவு திட்ட செயல்முறையில் ஈடுபாடு கொள்வதற்கான மேற்கொண்டு சந்தர்ப்பங்கள்:

- அந்தந்த வார்டுகளில் காப்பி குடித்தபடியேயான அரட்டைகள் – பிப்ரவரி 17, 20 மற்றும் 21, 2023
- மெய்நிகர் வியாபார நிமித்தமான வட்டமேஜை கலந்துரையாடல் – பிப்ரவரி 23, 2023 காலை 8 மணி

- டெலிபோன் டவுன் ஹால் #2 – பிப்ரவரி 25, 2023 நண்பகல் 12 மணி

மெய்நிகர் லின்க்-கள், நேரம் மற்றும் நடைபெறும் இடம் (இடங்கள்) பற்றிய மேற்கொண்டு விபரங்கள் www.brampton.ca/budget யிலும் ப்ராம்ப்ட்டன் நகரின் Twitter, Facebook மற்றும் Instagram இலும் கிடைக்கப் பெறச் செய்யப்படும்

**வரவு செலவுத் திட்ட காலஅட்டவணை வரிசை**

முன்மொழியப்படவிருக்கும் வரவு செலவுத் திட்ட அறிக்கையானது, நகரின் வலைப்பக்கத்தில் பிப்ரவரி 15, புதன்கிழமையன்று பதிவிடப்படும்.

பரஸ்பர செயல்பாடுகள் பிப்ரவரி 27, 2023 அன்று துவங்கி, மார்ச் 8, 2023 அன்று ஒப்புதல் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

ப்ராம்ப்ட்டன் நகரின் வருடாந்திர வரவு செலவுத் திட்டமானது, வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதை உறுதிசெய்யும் வகையிலான முன்னுரிமை கொண்ட விஷயங்கள், இலக்குகள் மற்றும் முன்முயற்சிகளை அடையாளம் காட்டுகிறது, மற்றும் குடியிருப்பாளர்களுக்கு மிகவும் முக்கியமானவை எவை என்பதிலும் கவனம் செலுத்துகிறது.

ப்ராம்ப்ட்டன் நகரின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/budget.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca